தினமணி

**உணவுப் பணவீக்கம் 10.63 % ஆக சரிவு**

First Published : 18 Nov 2011 01:16:12 AM IST




புது தில்லி, நவ.17 : நாட்டின் உணவுப் பணவீக்கம் நவம்பர் மாதம் 5-ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 10.63 சதவீதமாக குறைந்துள்ளது.

மொத்த விலை குறியீட்டெண் அடிப்படையில் கணக்கிடப்படும் உணவுப் பணவீக்கம் 1.18 சதவீதம் குறைந்துள்ளது. அக்டோபர் 29ம் தேதியுடன் முடிவுற்ற வாரத்தில் இது 11.81 சதவீதமாக காணப்பட்டது. கடந்த ஆண்டு இதே காலத்தில் உணவுப் பணவீக்கம் 11.41 சதவீதமாக இருந்தது.

முந்தைய வாரத்துடன் ஒப்பிடும் போது, உணவுப் பணவீக்கம் 1.18 சதவீதம் குறைந்துள்ள போதும், இதனால் பொதுமக்களுக்கு பலன் கிடைக்கவில்லை. வெங்காயம்,கோதுமையை தவிர மற்ற அத்தியாவசியப் பொருள்களின் விலை சரியவில்லை.

ஆண்டுக்கணக்கில் கணக்கிடும் போது, வெங்காயத்தின் விலை 22.89 சதவீதம் குறைந்துள்ளது. கோதுமை விலை 3.63 சதவீதம் குறைந்துள்ளது. காய்கறிகளின் விலை 27.26 சதவீதமும், பயறுகளின் விலை 14.44 சதவீதமும், பாலின் விலை 11.73 சதவீதமும் உயர்ந்துள்ளது. முட்டை, மாமிசம்,மீன்கள் விலை 11.73 அதிகரித்துள்ளது.

முதன்மைப் பொருள்களின் விலை 11.43 சதவீதத்திலிருந்து 10.39 சதவீதமாக சரிந்துள்ளது. மொத்த விலை குறியீட்டெண் கணக்கிடுவதில், இதன் பங்களிப்பு 20 சதவீதமாக உள்ளது.

இழைகள், எண்ணெய் வித்துக்கள், கனிமங்கள் போன்ற உணவுசாராப் பொருள்களின் விலை 6.41 சதவீதத்திலிருந்து 5.33 சதவீதமாக குறைந்துள்ளது.
எரிபொருள் மற்றும் எரிசக்தி விலை 14.50 சதவீதத்திலிருந்து 15.49சதவீதமாக உயர்ந்துள்ளது.
உணவுப் பொருள்களின் விலை உயர்வை கட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் மத்திய அரசுக்கும், பாரத ரிசர்வ் வங்கிக்கும் ஏற்பட்டுள்ளது.
நாட்டின் பொது பணவீக்கம் கடந்த 2010-ம் ஆண்டு முதல் தொடர்ந்து 9 சதவீதத்துக்கு மேலே உள்ளது. செப்டம்பர் மாதத்தில் பொது பணவீக்கம் 9.73 சதவீதமாக உள்ளது.

பணவீக்கத்தை கட்டுக்குள் கொண்டு வரும் முயற்சியாக, கடந்த 2010-ம் ஆண்டு முதல் இதுவரை வட்டி விகிதங்கள் 13 தடவை உயர்த்தப்பட்டுள்ளன. இரண்டாவது காலாண்டுக்கான நிதிக் கொள்கையை அக்டோபர் 25-ம் தேதி அறிவித்த போது, டிசம்பர் மாதத்துக்குப் பிறகு பணவீக்கம் குறையத் தொடங்கும் என ரிசர்வ் வங்கி நம்பிக்கைத் தெரிவித்தது. அடுத்த ஆண்டு மார்ச் மாதவாக்கில் இது 7 சதவீதமாக குறையும் என்றும் எதிர்பார்ப்பதாகவும் அது கூறியது.

நல்ல அறிகுறி : உணவுப் பண வீக்கம் குறைந்துள்ளது நல்ல அறிகுறி என மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார். இது தொடர்பாக தில்லியில் செய்தியாளர்களிடம் அவர் வியாழக்கிழமை மேலும் கூறியது :
உணவுப் பணவீக்கம் குறைந்து வருவது தொடர்ந்தால் அது நல்ல அறிகுறி. உணவுப் பொருள்களைப் பொறுத்தவரை, இந்நிலை மேலும் சில காலம் தொடர்ந்தால், ஒரளவுக்கு நிவாரணம் கிடைக்கக்கூடும் என்றார் அவர்.

""வரும் வாரங்களில் விலைகள் குறையும் என எதிர்பார்க்கிறோம். பண்டிகை காலம் முடிவுற்றதையடுத்து, பொருள்களுக்கானத் தேவை ஒரளவு குறைந்து வருகிறது.
இதனால் நவம்பர் மாதத்தில் இது ஒற்றை இலக்கமாக சரிந்து டிசம்பருக்குப் பிறகு மேலும் குறையக்கூடும்'' என்றார் "இக்ரா' தரக்குறியீடு நிறுவனத்தின் பொருளாதார நிபுணர் அதிதி நய்யர்.

**கலப்பு நெல் விதையால் நஷ்டத்தை சந்திக்கும் விவசாயிகள்**

First Published : 18 Nov 2011 03:38:21 AM IST



எஸ்ஆர் கண்டிகையில் கலப்பின நெல் விளைச்சலைப் பார்வையிடும் திரூர் நெல் ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியர் பானுமதி.

திருவள்ளூர், நவ.17: திருவள்ளூர் அருகே உயர்ரக நெல் விதையான பிபிடி 5204 விதைத்த விவசாயிகள் பெருத்த நஷ்டம் ஏற்படும் என கவலை அடைந்துள்ளனர்.

திருவள்ளூரை அடுத்த பூண்டி ஒன்றியத்துக்கு உள்பட்ட வேளகாபுரம், எஸ்ஆர் கண்டிகை, மாம்பாக்கம் உள்ளிட்ட கிராமங்களில் உள்ள விவசாயிகளான பாஸ்கர், சுரேஷ், பாண்டியன், தியாகராஜன், குணா, கஜேந்திரன், ராமதாஸ் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் சுமார் 250 ஏக்கரில் நெல் பயிர் விதைத்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் பிபிடி 5204 என்ற உயர் ரக விதை நெல்லை விதைத்துள்ளனர். இதன் மூலம் ஒரு ஏக்கருக்கு 30 மூட்டை அறுவடை செய்து சுமார் 30 ஆயிரம் வரை விற்பனை செய்வது வழக்கம்.

இவர்கள் ஆந்திர மாநிலத்தில் உற்பத்தி செய்து, அங்கு அரசிடம் தரச்சான்று பெற்று விற்பனை செய்யும் ராசி விதை நிறுவனத்தில் இருந்து சென்னை விதை நிறுவனம் என்ற மொத்த விற்பனையாளர் மூலம் ஊத்துக்கோட்டையில் உள்ள ஒரு ஏஜென்சியில் நெல்லை வாங்கியுள்ளனர்.

இந்த ரகம் நடவு செய்து 140 நாள்களில் முற்றிய கதிராக அறுவடைக்கு தயாராகும். இந்நிலையில் மேற்கண்ட விவசாயிகள் வாங்கிய விதை நெல்லில் சன்னரக கலப்பு விதை இருந்ததால் 55 நாளில் கலப்பு விதைகள் முற்றிய நெல்லாக வளர்ந்துள்ளது.

இதில் வேதனை என்னவென்றால் உயர்ரக நெல்லான பிபிடி 5204 என்ற கதிர் 30 சதவீதம் மட்டுமே விளைந்துள்ளது.

மீதமுள்ள 70 சதவீதம் மட்டரக நெல் முற்றிய நிலையில் விளைந்துள்ளது. தற்போது விளைந்துள்ள ரகம் ஒரு ஏக்கருக்கு 15 ஆயிரம் மட்டுமே விலை போகும் என விவசாயிகள் கூறுகின்றனர். இதில்

மேலும் ஒரு சரிவு என்னவென்றால் சன்னரகத்தை அறுவடை செய்தால் 30 சதவீதம் விளைந்துள்ள உயர்ரக நெல் நஷ்டமாகும். உயர்ரக நெல்லுக்காக காத்திருந்தால் தற்போது விளைந்துள்ள 70 சதவீத சன்னரக நெல்லும் நாசமாகும் நிலை உள்ளது.

இதையடுத்து விவசாயிகள் முறையிட்டதன் பேரில் திரூர் நெல் ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் பானுமதி மற்றும் அலுவலர்களும், நெல் விதையை விற்பனை செய்த நிறுவனத்தின் அலுவலர்களும் வந்து நெற்பயிரை பார்வையிட்டனர். பரிசோதனைக்காக விளைந்த நெல்லையும் எடுத்துச் சென்றனர்.

இதுகுறித்து ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியரை கேட்டபோது நாங்கள் இதுகுறித்து பரிசோதனை செய்த பின்னர் அறிக்கையை வெளியிடுவோம் என்றார். விதை நெல் விற்பனை செய்த அலுவலர்களிடம் கேட்டபோது இதே விதை நெல் கடலூரில் டன் கணக்கில் விற்பனை செய்துள்ளோம். ஆனால் அங்கு எவ்வித பிரச்னையும் எழவில்லை. தற்போது ஆராய்ச்சி நிலைய அறிக்கைக்கு பின்னரே எதுவும் கூறமுடியும் என்றனர். இதனால் விவசாயிகள் பெரும் கவலை அடைந்துள்ளனர்.

**"அரசு அலுவலர்கள் முனைப்புடன் செயலாற்ற வேண்டும்'**

First Published : 17 Nov 2011 01:23:50 PM IST

பெரம்பலூர், நவ. 16: பெரம்பலூர் மாவட்டத்தில் அரசு திட்டங்களைச் செயல்படுத்துவதில் அரசு அலுவலர்கள் முனைப்புடன் செயலாற்ற வேண்டும் என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

சென்னையில் தமிழக முதல்வர் தலைமையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு தலைமை வகித்த ஆட்சியர் பேசியது:

முதலமைச்சரின் தனிப் பிரிவிலிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்காக, பெரம்பலூர் மாவட்டத்துக்கு தமிழக முதல்வரால் இரண்டாம் இடத்துக்கான கேடயம் வழங்கப்பட்டது.

இந்தக் கேடயம் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டதால்தான் கிடைத்துள்ளது. தமிழக முதல்வர், அரசு திட்டங்கள் அனைத்தும் விரைவாக மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு செயலாற்றி வருகிறார்.

எனவே, அவரது எண்ணத்தை நிறைவேற்றும் வகையில், முனைப்போடு செயலாற்றி, மேலும் பல விருதுகளை பெரம்பலூர் மாவட்டம் பெற வழிவகை செய்ய வேண்டும்.

சிறிய வெங்காயம், பருத்தி மற்றும் சோளம் ஆகியவற்றின் உற்பத்தியில் தமிழகத்திலேயே பெரம்பலூர் மாவட்டம் முதலிடம் பெற்று விளங்குகிறது. பெரம்பலூர் மாவட்டத்தில் ஒழுங்குமுறை விற்பனை சந்தை அமைப்பதற்கு தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

பயிர்க் கடன் வழங்குவதற்கு குறியீட்டான ரூ. 40 கோடியில், கூட்டுறவுத் துறை மூலம், இதுவரை ரூ. 27.38 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ரூ. 10 கோடி பெறப்பட்டு, விவசாயிகளுக்கு ரூ. 50 கோடி வரை விவசாயக் கடன்கள் டிசம்பர் 15-ம் தேதிக்குள் வழங்கப்படும்.

திருந்திய நெல் சாகுபடி முறையில் 6,300 எக்டேரில் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் ஹெக்டேருக்கு 7,500 மெட்ரிக் டன் நெல் உற்பத்தி கிடைக்கவுள்ளது. எனவே, விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையில் விவசாயம் செய்ய வேண்டும். கரும்பு உற்பத்தியில் தற்போது ஹெக்டேருக்கு 98 மெட்ரிக் டன் மகசூல் கிடைக்கிறது. இதை அதிகப்படுத்த, நுண்ணீர் பாசன முறையை விவசாயிகள் கடைப்பிடிக்க வேண்டும்.

இதுதொடர்பான ஆலோசனைகளைப் பெற, அருகே உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களைத் தொடர்பு கொள்ளலாம். சுகாதாரத் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களில், அலுவலர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும். நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிப் பகுதிகளைத் தூய்மையாக வைத்துக்கொள்வதில் அரசு அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் தனிக் கவனம் செலுத்தி பணியாற்ற வேண்டும்.

நகராட்சி, பேரூராட்சி பகுதிகளில் நாள்தோறும் குப்பைகள் அகற்றப்படுவது தொடர்பாக மாவட்ட ஆட்சியரின் செல்போன் எண்ணுக்கு எஸ்.எம்.எஸ். மூலம் தகவல் அனுப்பிவைக்க வேண்டும்.

இந்தப் பணிகள் பள்ளி ஆசிரியர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள், நியாயவிலைக் கடைகளின் அலுவலர்கள் ஆகியோர் மூலம் முழுமையாகக் கண்காணிக்கப்படும்.

மக்கும் குப்பை, மக்காத குப்பை என தனித் தனியாக பிரித்து அகற்ற, உள்ளாட்சித் துறை அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் எம்.ஏ. சுப்பிரமணியம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் கே. சுமதி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் கி. கண்ணதாசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் மலையாளம், உ. தமிழரசி, கோட்டாட்சியர் இரா. ரேவதி, கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் ஆர். ராமமூர்த்தி, நகராட்சி ஆணையர் போ.வி. சுரேந்திரஷா உள்ளிட்ட அனைத்துத் துறை அலுவலர்களும் கலந்துகொண்டனர்.

**"கறவை மாடு வைத்திருப்பவரே தீவனப் பயிர் வளர்க்கலாம்'**

த. தேவராஜ்

First Published : 17 Nov 2011 10:46:41 AM IST

கடலூர் : தமிழகத்தில் பால் தேவை எப்போதும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இப்போதையை பால் உற்பத்தி, நமது தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்வதாக இல்லை.

பால் தட்டுப்பாடுதான் பல்வேறு கலப்படங்களுக்கும், விலையேற்றத்துக்கும் மூலகாரணம். எனவே பால் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் கலப்படமற்ற, சுத்தமான பாலை நியாயமான விலையில் பெறமுடியும்.

பால் உற்பத்தியைப் பெருக்க தமிழகத்தில் இன்னமும் நிறைய கறவை மாடுகள் வளர்க்கப்பட வேண்டும். நிறைய மாட்டுப் பண்ணைகள் உருவாக வேண்டும். எனவே தான் தமிழக அரசு மாடு வளர்ப்புக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. இலவசமாகவும் மானியத்திலும் கறவைமாடுகள் வழங்கப்படுகின்றன. மாடுகள் அதிக அளவில் வளர்க்க மேய்ச்சல் நிலம் தேவை. ஆனால் மேய்ச்சல் நிலங்கள் எல்லாம் காணாமல் போய் பல ஆண்டுகள் ஆகிவிட்டன.

இதனால் மாடுகளுக்கான தீவனப் புல் கிடைப்பதில் பெருமளவு தட்டுப்பாடு நிலவி வருகிறது. கறவை மாடுகளுக்கு கால் பங்கு வைக்கோல், அரைப் பங்கு பசுந் தீவனம், கால் பங்கு கடைகளில் கிடைக்கும் ஏனைய தீவனங்கள் கொடுத்தால் மாடுகள் ஆரோக்கியமாகவும், நிறைய பாலும் கறக்கும். பராமரிப்புச் செலவும் குறையும் என கால்நடை மருத்துவர்கள் கூறுகின்றனர்.

எனவே பால் உற்பத்தியில் தீவனப் பயிர்களின் பங்கு பெரிதும் அங்கம் வகிக்கிறது. 5 மாடுகளுக்கு மேல் வைத்து இருப்பவர்கள் நிச்சயம் தீவனப் பயிர்களை வளர்க்க வேண்டும். அல்லது விலைகொடுத்து வாங்கவேண்டும் என்கிறது கால்நடை பராமரிப்புத்துறை.

வீட்டுக்கு 2 மாடுகள் வைத்திருக்கும் ஐவர் சேர்ந்து, தீவனப் பயிர்களை விளைவிக்கலாம். தீவனப் பயிர்கள் வளர்க்க, கால்நடை பராமரிப்புத் துறை நிறைய மானியம் வழங்குகிறது.

தீவனப்பயிர்கள்: தீவனப் பயிர்களில் முக்கியமானவை தீவன மக்காச் சோளம், தீவனச் சோளம், தீவனக் கம்பு, கினியா புல், தீவன தட்டைப் பயறு, கம்பு நேப்பியர் புல் ஆகியவை.

தீவன மக்காச் சோளத்தில் ஆப்பிரிக்கன் உயரம், டெக்கான், கங்கா, கோ1 என்ற ரகங்கள் உள்ளன. இவற்றுக்கு உரத்தேவை ஹெக்டேருக்கு 40 கிலோ யூரியா, 64 கிலோ சூப்பர் பாஸ்பேட், 16 கிலோ பொட்டாஷ். ஹெக்டேருக்கு 16 கிலோ விதை தேவை. விதைத்த 3-ம் நாள் தண்ணீர், பின்னர் வாரம் ஒரு முறை நீர்பாய்ச்சினால் போதும். 60-வது நாள் முதல் பூக்கும் வரை தொடர்ந்து அறுவடை செய்யலாம்.

தீவனச் சோளம் கோ 11, கோ 27 என்ற ரகங்கள் கிடைக்கின்றன. இவற்றுக்கு ஹெக்டேருக்கு 12 கிலோ யூரியா, 16 கிலோ சூப்பர் பாஸ்பேட், 8 கிலோ பொட்டாஷ், மேலுரமாக 30-வது நாளில் 12 கிலோ யூரியா இட வேண்டும். விதைத் தேவை ஹெக்டேருக்கு 16 கிலோ. விதைத்த உடன் முதல்

தண்ணீரும், 3-ம் நாளில் 2-வது தண்ணீர், பின்னர் 10 நாள்களுக்கு ஒருமுறை நீர்ப் பாய்ச்சினால் போதும். 60 முதல் 65 நாளில் அறுவடை செய்யலாம்.

தீவனக் கம்பு: தீவனக் கம்பு கோ 8 என்ற ரகம் கிடைக்கிறது. இதற்கு ஹெக்டேருக்கு அடியுரமாக 12 கிலோ யூரியா, 96 கிலோ சூப்பர் பாஸ்பேட், 8 கிலோ பொட்டாஷ், மேலுரமாக 21 கிலோ யூரியா இட வேண்டும். விதை அளவு ஏக்கருக்கு 4 கிலோ. 10 முதல் 15 நாள்களுக்கு ஒருமுறை நீர்ப் பாய்ச்சினால் போதும். 40 முதல 45 நாள்களில் அறுவடை செய்யலாம்.

கினியா புல்: ஏக்கருக்கு 20:20:60 கிலோ முறையே தழை, மணி, சாம்பல் சத்துக்களும், மேலுரமாக 10 கிலோ தழைச்சத்தும் இட வேண்டும். ஏக்கருக்கு ஒரு கிலோ விதை தேவை. வேர்க் கரணை ஏக்கருக்கு 20,640. விதைத்த உடன் முதல் தண்ணீர் 3-ம் நாளும், பின்னர் 15 முதல் 20 நாள்களுக்கு ஒருமுறையும் நீர்ப்பாய்ச்சினால் போதும். 50 முதல் 55 நாள்களில் அறுவடை செய்யலாம்.

தீவன தட்டைப்பயறு: இதில் கோ 5 ரகம் கிடைக்கிறது. உரத்தேவை ஏக்கருக்கு அடியுரம் 10:16:8 முறையே தழை, மணி, சாம்பல் சத்துக்கள் இட வேண்டும். ஏக்கருக்கு 14 கிலோ போதுமானது. விதைத்து 3-வது நாளில் முதல் தண்ணீரும், பின்னர் 10 நாள்களுக்கு ஒரு முறையும் நீர்ப் பாய்ச்சினால் போதும். 50 முதல் 55 நாளில் அறுடைக்கு வரும்.

கம்பு நேப்பியர் புல்: என்.பி.21, என்.பி.2, கோ1, கோ2, கோ3 ஆகிய ரகங்கள் கிடைக்கின்றன. விதைக் கரணைகள் ஏக்கருக்கு 16 ஆயிரம் தேவை. அடியுரமாக ஏக்கருக்கு 20:20:16 கிலோ விகிதத்தில் முறையே தழை, மணி, சாம்பல் சத்துக்கள் இடவேண்டும். முதல் தண்ணீர் நடும் போதும், 2-வது தண்ணீர் நட்ட 3-வது நாளிலும் பாய்ச்ச வேண்டும். பின்னர் 10 நாள்களுக்கு ஒருமுறை நீர்ப் பாய்ச்சினால் போதும். முதல் அறுவடை 80 நாள்களிலும், பின்னர் 45 நாள்களுக்கு ஒரு முறையும் செய்யலாம்.

**தீவனப் பயிர்களுக்கு மானியம்**

First Published : 17 Nov 2011 10:47:07 AM IST

வேலூர்: தீவனப் பயிர்களுக்கு அரசு சார்பில் மானியம் வழங்கப்படுகிறது. இதுகுறித்து வேளாண் அதிகாரி கூறியது:

கால்நடைகளின் பராமரிப்புச் செலவைக் குறைப்பதில் பசுந்தீவனம் ஒரு முக்கியப் பங்காற்றுகிறது.

அதிக மகசூல் தரக்கூடிய கம்பு நேப்பியர் ஒட்டுப்புல், தானிய வகை தீவனப் பயிர்களான சோளம், மக்காச்சோளம் போன்றவைகளுடன் அதிக புரதச்சத்து நிறைந்த வேலி மசால், முயல் மசால்

மற்றும் தீவன வகை தட்டைப்பயறு போன்ற பயிர்களை இறவையிலும், மானாவாரியிலும் பயிர்செய்து கறவை மாடுகளுக்கு கலந்து வழங்கலாம்.

இதன் மூலம் அடர் தீவனத்தின் தேவை குறைந்து பால் உற்பத்திக்கான செலவினம் குறைகிறது. கூடுதல் லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது.

விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தினை சீராக மேம்படுத்தும் நோக்குடன் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் நடப்பு நிதியாண்டில் அரசு மானியத்துடன் கூடிய தீவனப் பயிர் அபிவிருத்தி மற்றும் அதன் உபயோக மேலாண்மை குறித்தான கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளது.

திட்டங்களும், மானிய விவரங்களும்

அதிக மகசூல் தரக்கூடிய கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் இரகம் கோ-3 அல்லது கோ-4 உடன் முயல் மசால் அல்லது வேலி மசால் தீவனப் பயிர்கள் இறவையில் சாகுபடி செய்வதற்கு 25 சென்ட் பரப்புக்கு ரூ. 2500 மானியம்.

மானாவாரியில் 25 சென்ட் பரப்பில் தீவனச் சோளம் அல்லது தீவன மக்காச் சோளத்துடன் தீவனத் தட்டைப் பயறு சாகுபடி செய்ய ரூ. 1350 மானியம்.

தெளிப்பு நீர் பாசனக் கருவிகள் நிறுவுவதற்கு குறு மற்றும் சிறு விவசாயிகளுக்கு ரூ. 18750 (75 சதவீதம் மானியம்).

கையால் இயங்கும் புல் நறுக்கும் கருவியின் மதிப்பில் 75 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. (அதிகபட்ச மானியம் ரூ. 6375).

மின் சக்தியினால் இயங்கும் புல் நறுக்கும் கருவியின் மதிப்பில் 75 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. ( அதிகபட்ச மானியம் ரூ. 11,250).

தீவனப்புல் வெட்டும் கருவியின் மதிப்பில் 50 சதவீதம் (அதிகபட்சம் ரூ. 12,500).

ஊறுகாய்ப் புல் தயார் செய்வதற்கு நூறு சதவிகிதம் மானியத்தில் ரூ. 30,000 வழங்கப்படுகிறது.

மேற்கண்ட திட்டங்களின் மூலம் பயன்பெற விருப்பமுள்ள கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள கால்நடை உதவி மருத்துவர் அல்லது வேளாண்மைத் துறை சார்ந்த வேளாண்மை அலுவலரை நேரில் தொடர்புகொண்டு பயன்பெறலாம். மேலும் விருப்பமுள்ள திட்டங்களைக் குறிப்பிட்டு எழுத்து மூலமாவும் விண்ணப்பிக்கலாம்.

**சத்தான உணவு குறித்த கருத்தரங்கம்**

First Published : 17 Nov 2011 12:38:46 PM IST

திண்டுக்கல், நவ. 16: திண்டுக்கல் குயின் சிட்டி மகளிர் ரோட்டரி சங்கம் சார்பில், இயற்கை உரங்களைப் பயன்படுத்தி காய்கறிகளைப் பயிரிடுவது, சத்தான உணவு குறித்த பயிலரங்கம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

திண்டுக்கல் ஆர்.கே.ஜி.ஜி. ரோட்டரி அரங்கில் நடைபெற்ற இந்த பயிலரங்கத்துக்கு, சங்கத் தலைவி பி. ராமதிலகம் தலைமை வகித்தார். காந்திகிராம கே.வி.கே. தொழில்நுட்ப வல்லுநர்கள் செந்தில்குமார், ஸ்ரீகுமாரி ஆகியோர் இயற்கை முறையிலான காய்கறிகள், சத்தான உணவுகள் குறித்துப் பேசியதாவது: தற்போது காய்கறிகளின் விலை உயர்ந்து கொண்டே இருக்கிறது. ரசாயன உரங்களைப் பயன்படுத்தி விளைவிக்கப்படும் காய்கறிகளைத் தவிர்க்க வேண்டும். அவரவர் வீட்டு மாடியிலேயே காய்கறிகளை விளைவிக்க முடியும். சத்தான உணவினைப் பயன்படுத்துவது தற்போது குறைந்து உள்ளது. உணவில் பழங்களை 40 சதவீத நகர்புற மக்களே சேர்த்துக் கொள்கின்றனர். கிராமப்புறத்தினருக்கு பழங்கள் என்பது ஆடம்பர பொருளாக மாறியுள்ளது.

வீட்டிலேயே வெண்டை, எலுமிச்சை, பப்பாளி, தக்காளி, முருங்கை போன்றவற்றை பயிரிட முடியும். இயற்கை உரமிட்ட காய்கறிகளைப் பயன்படுத்தும்போது, நோய் எதிர்ப்பு சக்தி கூடும். மேலும், வீட்டில் தோட்டம் அமைத்து காய்கறிகளை பயிர் செய்யும்போது, வீட்டிலுள்ள பெண்களுக்கு மனஅழுத்தம் குறையும் என்றனர். ஜெயலட்சுமி நன்றி கூறினார்.

**கரும்பு சாகுபடியில் கூடுதல் வருமானம் பெற யோசனை**

First Published : 17 Nov 2011 01:25:43 PM IST

ஆலங்குடி, நவ. 16: கரும்பு சாகுபடியில் கூடுதல் வருமானம் பெற மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகேயுள்ள வடகாட்டில் கரும்பு சாகுபடியில் நவீன தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு அண்மையில் அளிக்கப்பட்ட பயிற்சியைத் தொடக்கிவைத்து ஆலங்குடி கரும்பு கோட்ட மேலாளர் கே. செந்தில்குமார் பேசியது:

குரும்பூர் சர்க்கரை ஆலையில் நிகழாண்டுக்கான அரைவை நவ. 9-ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. கரும்பு சாகுபடியை அதிகரிக்கும் வகையில், சாகுபடி முறையில் விதைப்பில் தொடங்கி அறுவடை வரை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, ஏக்கருக்கு ரூ. 8 ஆயிரம் மதிப்பிலான 4 டன் விதைக் கரும்பு தேவைப்படுகிறது. அதை விதைப்பதற்கு ரூ. 5 ஆயிரம் செலவாகிறது. இத்தகைய செலவு ஒருபுறமிருக்க, மின் தடையால் நிலவும் தண்ணீர் பற்றாக்குறையாலும் விவசாயிகளுக்கு கரும்பு சாகுபடியின் மீது நம்பிக்கை குறைந்துவிட்டது.

இத்தகைய பிரச்னைகளை களைந்து கரும்பு சாகுபடியை அதிகரிக்கவும், விவசாயிகளைக் காப்பாற்றவும் கரும்பு சாகுபடி முறை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.

தண்ணீர் பாய்ச்சுவதற்கு 5-க்கும் 5 அடியில் குழாய் பதித்து சொட்டு நீர்ப் பாசனம் மேற்கொள்ளப்படுகிறது. இதன்மூலம் தண்ணீர், இடுபொருள்கள் யாவும் அளிக்கப்படுகிறது. சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க ஏக்கருக்கு ரூ. 18 ஆயிரமும், சர்க்கரை ஆலையில் இருந்து ரூ. 6 ஆயிரமும் அளிக்கப்படுகிறது.

மேலும், ஒற்றை நாற்றுமுறையில் சாகுபடி மேற்கொள்வதற்கு நாற்று ஒரு ரூபாய் வீதம் 6 ஆயிரம் நாற்றுக்களைக் கொண்டு நடவு செய்துவிடலாம். தொழிலாளர்கள் அதிகளவு தேவையில்லை. இத்தகைய விதைப்பு மூலம் ரூ. 8 ஆயிரம் வரை சேமிக்கப்படுகிறது.

இந்த முறையில் கரும்பு சாகுபடி மேற்கொள்வதால் இயந்திரம் மூலம் அறுவடை செய்வதற்கு எளிமையாக உள்ளது. மேலும், இயந்திரம் மூலம் அறுவடைக்கு தொழிலாளரின் எண்ணிக்கை குறைவதால், டன்னுக்கு ரூ. 500 வரை செலவு குறையும்.

ஒற்றை கரும்புப் பயிர்களில் பூச்சிகள், நோய்களை எளிதில் கட்டுப்படுத்தலாம். இத்தகைய நவீன தொழில்நுட்ப முறையில் கரும்பு சாகுபடி மேற்கொள்வதன் மூலம், 75 சதம் கூடுதல் வருமானம் பெறலாம்.

கரும்பு நாற்றுக்களை ஆலங்குடி அருகேயுள்ள வடகாட்டில் உள்ள மருதம் நர்சரி பண்ணையை அணுகிப் பெறலாம். தற்போது கரும்பு நடவு செய்வதற்கு ஏற்ற பருவமாகும் என்றார் அவர்.

ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் செல்வம், நர்சரி பண்ணை இயக்குநர் எஸ். தேவதாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பயிற்சியில் கரும்பு ஆலங்குடி கோட்ட அலுவலர் எம். பழனிவேல், கொரமண்டல் உர நிறுவனத்தின் மண்டல மேலாளர் காமராஜ், கரும்பு மேற்பார்வையாளர் பொன்னுச்சாமி ஆகியோர் பேசினர்.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் அனைவரும் கரும்பு நாற்று தயாரித்தல், நடவு செய்யும் முறை குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**மத்திய,மாநில முகமை அமைப்புகளின்நெல் கொள்முதல் 1 கோடி டன்னை எட்டியது**

நவம்பர் 18,2011,00:54

புதுடில்லி:நடப்பு கரீப் பருவம் தொடங்கியதில் இருந்து இதுவரை, மத்திய,மாநில முகமை அமைப்புகளின் நெல் கொள்முதல் 1 கோடி டன்னை எட்டியுள்ளது.கரீப் சந்தைப்படுத்தும் பருவம் அக்டோபரில் தொடங்கி செப்டம்பரில் முடிவடைகிறது.



இதன்படி, நடப்பாண்டில், சென்ற அக்டோபர் முதல் நவம்பர் 15ம் தேதி வரையிலான ஒன்றரை மாதங்களில், இந்திய உணவுக் கழகம் மற்றும் மாநில அரசுகளின் முகமை அமைப்புகள், 99 லட்சம் டன்னிற்கும் அதிகமாக நெல்லை கொள்முதல் செய்துள்ளன.தமிழ்நாடு:குறிப்பாக தமிழ்நாடு, பஞ்சாப், அரியானா மாநிலங்களில் அதிகளவில் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.பஞ்சாபில் இருந்து 75 லட்சம் டன்னும், அரியானாவில் இருந்து 19 லட்சம் டன்னும், தமிழ்நாட்டில் இருந்து 2.20 லட்சம் டன் நெல்லும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக, இந்திய உணவு கழகத்தை சேர்ந்த உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதே காலத்தில், கேரளா மற்றும் உத்தரபிரதேச மாநிலங்கள் முறையே, 77 ஆயிரத்து 891 டன் மற்றும் 77 ஆயிரத்து 450 டன் என்ற அளவில் முகமை அமைப்புகளுக்கு நெல் வழங்கியுள்ளன.நாட்டின் ஒட்டுமொத்த நெல் கொள்முதலில், பஞ்சாப் மாநிலத்தின் பங்களிப்பு 30 சதவீதம் என்ற அளவில் உள்ளது. எனினும், பஞ்சாபில் நெல் பயிரிடும் பரப்பளவு குறைந்துள்ளதால், அதன் நெல் அளிப்பு 1.30 கோடி டன் என்ற அளவில் இருந்து 1.20 கோடி டன்னாக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆந்திரா:நடப்பு 2011-12ம் ஆண்டு பயிர் பருவத்தில், நாட்டின் நெல் உற்பத்தி 10.2 கோடி டன்னை தாண்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதனால், நடப்பு கரீப் சந்தைப்படுத்தும் பருவத்தில் (அக்.-செப்.), மத்திய அரசு, சாதனை அளவாக 3.53 கோடி டன் நெல்லை கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளது.அடுத்த சில வாரங்களில், ஆந்திரா, சத்தீஸ்கர், ஒடிசா ஆகிய மாநிலங்களில் நெல் கொள்முதல் தொடங்க உள்ளது.இந்திய உணவு கழகம், பொது வினியோகத் திட்டத்தின் கீழ், அரிசி வழங்குவதற்காக, விவசாயிகளிடம் இருந்து ஒரு குவிண்டால் சாதா ரக நெல்லுக்கு, 1,000 ரூபாயும், உயர்வகை நெல்லுக்கு 1,030 ரூபாயும் கொடுத்து வாங்குகிறது.

சாதனை:நவம்பர் 1ம் தேதி நிலவரப்படி, இந்திய உணவுக் கழகம் மற்றும் மாநில முகமை அமைப்புகளிடம் 2.60 கோடி டன்னிற்கும் அதிகமாக நெல் கையிருப்பு உள்ளது. இது,

நிர்ணயிக்கப்பட்ட 2 கோடி டன் என்ற இருப்பை விட அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.இந்தியாவில், பொது வினியோக திட்டத்தின் கீழ் வழங்குவதற்காக மத்திய அரசுக்கு மாதம் 1 கோடி டன் நெல் தேவைப்படுகிறது.சென்ற 2010-11ம் ஆண்டு கரீப் மற்றும் ரபி பருவத்தில் பயிர் விளைச்சல் நன்கிருந்ததால், நாட்டின் உணவு தானியங்கள் உற்பத்தி 24.16 கோடி டன் என்ற புதிய சாதனை அளவை எட்டியது என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டின் நெல் உற்பத்தி 2008 - 09 ஆம் ஆண்டில் 10 கோடி டன் என்ற அளவில் இருந்தது. இது, 2009 - 10 ம் ஆண்டில் 8.90 கோடி டன்னாக குறைந்தது. நடப்பாண்டு, சர்வதேச அரிசி உற்பத்தி சாதனை அளவாக 48 கோடி டன் என்ற இலக்கை எட்டும் என ஐ.நா.வின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு தெரிவித்துள்ளது. சர்வதேச அளவில் எகிப்து, அர்ஜென்டினா, மொசாம்பிக், அமெரிக்கா மற்றும் ரஷ்ய கூட்டமைப்பு நாடுகளில் நெல் உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரித்து வருகிறது. குறிப்பாக, இந்தியா, சீனா, இந்தோனேஷியா, வங்கதேசம் ஆகிய முக்கிய நெல் உற்பத்தி நாடுகளில் நடப்பாண்டில் உற்பத்தி அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.அதே சமயம் தென்கொரியா, மடகாஸ்கர், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் நெல் உற்பத்தி குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**நாட்டின் உணவு பணவீக்கம் 10.63 % ஆக குறைவு**

நவம்பர் 17,2011,11:58



புதுடில்லி : நவம்பர் 05ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் நாட்டின் உணவு பணவீக்கம் 10.63 சதவீதமாக குறைந்துள்ளது. கடந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 11.81 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. வேளாண் பொருட்கள், வெங்காயம், கோதுமை உள்ளிட்ட பொருட்களின் விலைகள்  தொடர்ந்து அதிகரித்து வருவதன் காரணமாக உணவு பணவீக்கம் அதிகரித்துள்ளது. வெங்காயத்தின் விலை 22.89 சதவீதமும், கோதுமை விலை 3.63 சதவீதமும் குறைந்துள்ளது. இதே சமயம் பிற காய்கறிகளின் விலை 27.26 சதவீதமும், பருப்பு வகைகளின் விலை 14.44

சதவீதமும், பால் விலை 10.74 சதவீதமும், முட்டை, இறைச்சி, மீன் உள்ளிட்ட பொருட்களின் விலை 11.73 சதவீதமும் அதிகரித்துள்ளது. பழங்களின் விலை 5.99 சதவீதமும், தானிய வகைகளின் விலை 3.53 சதவீதமும் அதிகரித்துள்ளது.

**களை கட்டும் காபி சீசன்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 13,2011,00:00 IST



தாண்டிக்குடி: திண்டுக்கல் மாவட்டம் தாண்டிக்குடி மலைப் பகுதியில், காபி சீசன் துவங்கிய நிலையில், கூலி உயர்வால் விவசாயிகள் புலம்பித் தவிக்கின்றனர். இங்கு 30 ஆயிரம் ஏக்கரில் காபி விவசாயம் உள்ளது. தொடர் மழையால், காபி காய்கள் வேகமாக பழுத்து, உதிரும் நிலையில் உள்ளன. தாழ்வான பகுதிகளில் காபி பழங்கள் அழுகி உதிர்ந்தன. இதனால், அவசர அவசரமாக பழங்களை பறிக்க விவசாயிகள் தயாரான நிலையில், வேலையாட்கள் கூலியை உயர்த்தியுள்ளனர். வழக்கமாக பெற்ற 100 ரூபாயை விட கூடுதலாக, 30 முதல் 50 ரூபாய் வரை கேட்கின்றனர். இதனால், உற்பத்தி செலவு அதிகரித்துள்ளது. ஊரக வேலை உறுதி திட்டத்தால் சம்பள உயர்வு, வேலை ஆட்கள் குறைவு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர். இதனால், தோட்ட பணிகளுக்கு இயந்திரங்களை பயன்படுத்த தயாராகி விட்டனர். சிலர், நிலங்களை விற்பனை செய்வதில் இறங்கியுள்ளனர்.

ராகி சாகுபடியில் 1,35,000 டன் மகசூல் : கிருஷ்ணகிரி விவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நாள் : நவம்பர் 18,2011,02:42 IST

கருத்தை பதிவு செய்ய

ஓசூர்; கிருஷ்ணகிரி மாவட்டத்தில், ராகி சாகுபடியில் அமோக விளைச்சல் காணப்படுவதால், நடப்பாண்டு, ஒரு லட்சத்து 35 ஆயிரம் டன் மகசூல் எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், ஆண்டுதோறும், 45 ஆயிரம் ஹெக்டேரில் ராகி சாகுபடி நடக்கிறது. ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் மட்டும், 40 ஆயிரம் ஹெக்டேர் சாகுபடி நடக்கிறது. தமிழகத்திலேயே இங்குதான், ராகி சாகுபடிக்கு ஏற்ற தட்பவெப்பநிலை காணப்படுவதால், அதிகளவில் விவசாயிகள் ராகி சாகுபடியில் ஈடுப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு ஓசூர், கெலமங்கலம், தளி, சூளகிரி, ஓசூர் ஆகிய பகுதியில் ராகி பரவலாக சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஜூன், ஜூலையில் ராகி சாகுபடி செய்யப்படுகிறது. நான்கு மாதம் கழித்து நவம்பர், டிசம்பரில் ராகி அறுவடை செய்யப்படுகிறது.

இங்கு உற்பத்தியாகும் ராகி தமிழகம் மட்டுமின்றி வட மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது. ராகி பிஸ்கட், நூடுல்ஸ், கழி, கூழ் உள்ளிட்ட உணவு பண்டங்கள் தயாரிக்கவும், கோழி தீவனத்திற்கும் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. இதனால், ராகிக்கு தமிழகம், வட மாநிலங்களில் தேவை அதிகரித்துள்ளதோடு, கூடுதல் விலையும் கிடைத்து வருகிறது. கடந்த ஆண்டு ராகி சாகுபடியின் போது, போதிய மழையில்லாமலும், அறுவடையின் போது கனமழை பெய்ததாலும், எதிர்பார்த்த மகசூல் கிடைக்கவில்லை. இதனால், விவசாயிகள் கடந்த ஆண்டு நஷ்டமடைந்தனர்.

நடப்பாண்டு சாகுபடி நேரத்தில் ஓரளவு நல்ல மழையும், வேளாண்மை துறையின் புதிய தொழில்நுட்ப சாகுபடி முறையாலும், தற்போது, ராகி பயிர்கள், 4 அடி வரை கதிர்கள் செழித்து வளர்ந்து அறுவடைக்கு தயாராக உள்ளன. அறுவடை துவங்கி விட்டநிலையில், மழையின்றி நல்ல காலநிலை காணப்படுகிறது. அதனால், நடப்பாண்டு கூடுதல் மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இதுகுறித்து ஓசூர் வேளாண்மை துறை உதவி இயக்குனர் நாகராஜ் கூறியதாவது: ராகி சாகுபடியில் ஹெக்டேருக்கு, ஒன்றரை டன் முதல் இரண்டு டன் வரை மகசூல் கிடைக்கும். நடப்பாண்டு கடந்த ஆண்டை ஒப்பிடும் போது, ராகி கதிர்கள் நோய் தாக்குதல் இல்லாமல் வளர்ந்துள்ளது. சரியான நேரத்தில் நல்ல பக்குவம் அடைந்து கதிர்கள் அறுவடைக்கு தயாராக உள்ளன. தற்போது, ராகி அறுவடையில் விவசாயிகள் தீவிரமாக ஈடுப்பட்டுள்னளர். இந்த ஆண்டு ராகி சாகுபடியில் ஹெக்டேருக்கு, 3 டன் வீதம் 1 லட்சத்து 35 ஆயிரம் டன் மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது. ராகி சாகுபடியை பொறுத்தவரை, ராகியும், அவற்றின் தழைகள் கால்நடைகளுக்கு உணவாகவும் இரட்டிப்பு வருமானம் கிடைக்கிறது. சமீப காலமாக

கோழிப்பண்ணைகளில் கோழி தீவனமாக ராகியை பயன்படுத்த துவங்கியுள்ளனர். இதனால், ராகி விலை அதிகரித்து நிலையான விலையும் கிடைத்து வருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**பசுந்தீவன அபிவிருத்தி திட்டத்தில் சேருங்கள் : விவசாயிகளுக்கு தஞ்சை கலெக்டர் அழைப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 18,2011,00:45 IST

கருத்தை பதிவு செய்ய

தஞ்சாவூர்: "தமிழகத்தில் வெண்மை புரட்சியை உண்டாக்கும் நோக்கில் தமிழக முதல்வரால் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன' என்று தஞ்சை மாவட்ட கலெக்டர் பாஸ்கரன் தெரிவித்தார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நான்கு லட்சத்து 27 ஆயிரத்து 69 பசு மற்றும் எருமை இனங்களில் பால் உற்பத்தியை அதிகரிக்கவும், இனப்பெருக்க திறனை மேம்படுத்தவும் அபிவிருத்தி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

மத்திய அரசின் நிதி உதவியுடன் மேம்படுத்தப்பட்ட தீவன அபிவிருத்தி திட்டமும், தமிழக அரசின் தீவன அபிவிருத்தி திட்டமும் இணைந்து கால்நடை வளர்ப்போருக்கான பசுந்தீவன அபிவிருத்தி மற்றும் சாகுபடி திட்டம் இந்தாண்டில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் படி அதிக மகசூல் தரக்கூடிய கோ 3, கோ 4 என்ற தீவனப்பயிருடன் வேலிமசாஸ் மற்றும் குதிரை மசாஸ் மூன்று வரிசைக்கு ஒரு வரிசை என்ற விகிதத்தில் கலந்து இறவை சாகுபடியில் பயிரிட கால் ஏக்கருக்கு ரூபாய் இரண்டாயிரத்து 590 மான்யத்துடன் 200 ஏக்கர் நிலத்தில் பயிரிட 800 விவசாயிகள் பயனடையும் வகையில் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

மானவாரி சாகுபடியில் சோளம் மற்றும் மக்காச்சோளத்துடன் தட்டைப்பயிறு கலந்து விதைக்க கால் ஏக்கருக்கு ரூபாய் 350 மான்யத்துடன் 460 ஏக்கர் நிலத்தில் பயிரிட ஆயிரத்து 840 பயன்தாரர்கள் தேர்வு செய்யப்படவுள்ளார்கள்.

வளர்க்கப்பட்ட தீவனப்பயிர்களுக்கு இறவையில் தண்ணீர் உபயோக மேலாண்மைக்கு இயந்திர நீர் தெளிப்பான் கருவியகள் ரூபாய் 25 ஆயிரம் செலவில் வழங்கப்பட உள்ளது. இதில் 20 சிறு, குறு விவசாயிகளுக்கு நூறு சதவீத மான்யமும் இதர 35 விவசாயிகளுக்கு அதிகபட்சமாக 75 சதவீதம் அதாவது ரூபாய் 18 ஆயிரத்து 750 தொகையில் வழங்கப்பட உள்ளது.

பயிரிடப்பட்டுள்ள பசுந்தீவனங்களை சேதமில்லாமல் கால்நடைகளுக்கு அளிக்க புல் வெட்டும் கருவி ரூபாய் எட்டாயிரத்து 500 மதிப்பீட்டில் 75 சதவீத மானியத்தில் 30 விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது. மின் சக்தியால் இயங்கும் புல் வெட்டும் கருவி ரூபாய் 15 ஆயிரம் மதிப்பில் 75 சதவீத மானியத்தில் நூறு விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது.

குறைந்தப்பட்சமாக நான்கு பசுக்கள் வைத்துக்கொண்டு ஒரு ஏக்கருக்கு மிகாமல் தீவனம்

வளர்ப்போருக்கு ரூபாய் 30 ஆயிரம் செலவில் முழு மான்யத்துடன் ஊறுகாய் புல் தயாரிப்புக்கான தொகை ஐந்து பயனாளிகளுக்கு வழங்கப்பட உள்ளது. குறைந்த பட்சம் நான்கு பசுக்கள் அல்லது 25 ஆடுகள் வைத்து ஒரு ஏக்கருக்கு குறையாமல் பல்லாண்டு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு புல் அறுக்கும் கருவி ரூபாய் 25 ஆயிரம் மதிப்பில் 50 சதவீதம் மான்யத்தில் 70 பயனாளிகளுக்கு வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்துக்கான பயன்தாரர்கள் மாவட்டத்திலுள்ள கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் விவசாயத்துறை அலுவலர்களால் இணைந்து தேர்வு செய்யப்பட்டு கலெக்டர் ஒப்புதல் வழங்கப்பட உள்ளது.

இத்திட்டங்களினால் பயன்பெறும் விவசாயிகள் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளுக்கு இத்தீவன பாத்திகளை பராமரிக்க வேண்டும். இந்த திட்டங்கள் மூலம் 2,900 பயன்தாரர்கள் இந்தாண்டு தேர்வு செய்யப்பட்டு 89 லட்சத்து 28 ஆயிரத்து 500 ரூபாய் மட்டும் மானியமாக வழங்கப்பட உள்ளது.

கால்நடை வளர்க்கும் விவசாயிகள் இந்த அரிய வாயப்பினை பயன்படுத்திக் கொண்டு தங்களது கால்நடைகளுக்கு தேவையான பசுந்தீவனங்களை வளர்த்து கால்நடைகளுக்கு அளித்து மாவட்டத்தின் பால் உற்பத்தியினை அதிகரிக்க உறுதுணையாக இருக்க வேண்டும்.

இத்திட்டங்களில் சேர்ந்து பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் விண்ணப்பங்களை அருகில் உள்ள கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவரிடம் வழங்க வேண்டும். இத்திட்டங்கள் அனைத்தும் தஞ்சாவூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை மண்டல அலுவலகம் மற்றும் கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி திட்ட அலுவலகம் மூலம் செயல்படுத்தப்பட உள்ளது. இவ்வாறு கலெக்டர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 17,2011,23:36 IST

கருத்தை பதிவு செய்ய

ஊட்டி : ஊட்டி வேளாண்மை பொறியியல் துறை, உதவி செயற்பொறியாளர் அலுவலக செய்திக் குறிப்பு: நீலகிரி மாவட்டம் ஊட்டி வட்ட விவசாயிகளுக்கு வேளாண்மை பொறியியல் துறை, உதவி செயற்பொறியாளர் அலுவலகம் மூலமாக பயிர் பாதுகாப்பு உபகரணங்கள் தெரிவு செய்தல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் தொடர்பான பயிற்சி வரும் டிச.,12ம் தேதி முதல் 17ம் தேதி முடிய தோட்டக்கலை வளாகம், சேரிங்கிராஸ் ஊட்டியில் நடக்க உள்ளதால், பயிற்சியில் கலந்து கொள்ள விருப்பம் உள்ள விவசாயிகள், உதவி செயற்பொறியாளர் (வே.பொ) தாவரவியல் பூங்கா சாலை, ஊட்டி அலுவலகத்தில் வரும் 30ம் தேதிக்குள் பதிவு செய்து கொள்ளலாம். மேலும்

விபரங்களுக்கு 0423-2441557 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

தினகரன்

**உணவு பணவீக்கம் 10.63% ஆக குறைவு**

பதிவு செய்த நாள் : 11/18/2011 0:45:51



புதுடெல்லி: நவம்பர் 5ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் நாட்டின் உணவு பணவீக்கம் 10.63 சதவீதமாக குறைந்தது.

அக்டோபர் 29ம் தேதி வாரத்தில் மொத்த விலை குறியீட்டெண்படி (டபிள்யூ.பி.ஐ), உணவு பணவீக்கம் 11.81 சதவீதமாக இருந்தது. உணவு பொருட்களின் விலை தொடர்ந்து உயர்ந்து வரும் வேளையில், வெங்காயம் விலை 22.89 சதவீதமாகவும், கோதுமை விலை 3.63 சதவீதமாகவும் குறைந்தது.

அதன் விளைவாக, நவம்பர் 5ம் தேதி வாரத்தில் பணவீக்கம் 1.18 சதவீதம் குறைந்து 10.63 சதவீதமானது. கடந்த ஆண்டு இதே காலத்தில் இது 11.41 சதவீதமாக இருந்தது. இதற்கிடையில் பெட்ரோல், மின்சார பணவீக்கம் 14.50 சதவீதத்தில் இருந்து 15.49 சதவீதமாக அதிகரித்தது.

**மழையால் வேதாரண்யத்தில் உப்பு ஏற்றுமதி பாதிப்பு**

பதிவு செய்த நாள் : 11/18/2011 0:46:45



வேதாரண்யம்: வேதாரண்யத்தில் பெய்து வரும் மழையால் உப்பு ஏற்றுமதி பாதிக்கப்பட்டு உள்ளது. நாகை மாவட்டம், வேதாரண்யத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் விட்டு, விட்டு மழை பெய்தது. நேற்று காலை முதல் பலத்த மழை பெய்தது.

நேற்று மதியத்திற்கு மேல் விட்டு, விட்டு சாரல் மழை பெய்து வருகிறது. தொடர் மழை காரணமாக ஒரு மாதத்திற்கு முன்னரே உப்பு உற்பத்தி பணிகள் நிறுத்தப்பட்டு விட்டது. ஏற்றுமதி மட்டும் நடைபெற்று கொண்டிருந்தது.

மழையால் உப்பள பகுதியில் சாலைகள் பழுதானதாலும், நேற்று பெய்த பலத்த மழை காரணமாகவும் உப்பு ஏற்றுமதி பணி பாதிக்கப்பட்டுள்ளது. உப்பு ஏற்றுமதி செய்யும் தொழிலாளர்கள் வேலை இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**அரசு ஏல மையத்தில் 60% டீத்தூள் தேக்கம்**

பதிவு செய்த நாள் : 11/18/2011 0:48:5



குன்னூர் : குன்னூர் அரசு கூட்டுறவு ஏல மையத்தில் 60 சதவீத தேயிலைத் தூள் விற்பனையாகாமல் தேக்கம் அடைந்துள்ளதால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். நீலகிரி மாவட்டம், குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் நேற்று ஏலம் நடந்தது. மொத்தம் 6 லட்சத்து, 51,784 கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு வந்தது. இலை ரகம் 3 லட்சத்து 93,811 கிலோவும், டஸ்ட் ரகம் 2 லட்சத்து 57,973 கிலோவும் விற்பனைக்கு வந்தது.

ஏலத்தில் பாகிஸ்தான், ரஷ்யா உள்பட வெளிநாட்டு வர்த்தகர்கள் குறைவான அளவே கொள்முதல் செய்தனர். உள்நாட்டு வர்த்தகர்களும் மிகக் குறைந்த அளவில் பங்கேற்றதால் 60 சதவீத தேயிலைத் தூள் தேக்கம் அடைந்தது. அனைத்து ரகத்துக்கும் ரூ.2 முதல் ரூ.4 வரை விலை சரிந்தது. இந்த வார விலை நிலவரப்படி, இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு ரூ.42 முதல் ரூ.46 வரையிலும், உயர் வகைக்கு ரூ.58 முதல் ரூ.62 வரையிலும், டஸ்ட் ரகத்தில் சாதாரண வகைக்கு ரூ.45 முதல் ரூ.50 வரையிலும், உயர் வகைக்கு ரூ.68 முதல் ரூ.72 வரையிலும் விலை கிடைத்தது.

இந்த ஆண்டில் நடந்த 46 ஏலங்களில் இந்த வாரம்தான் 60 சதவீதம் தேயிலைத்தூள் தேக்கமடைந்தது. அதிகளவில் தேயிலைத்தூள் தேக்கம் அடைந்துள்ளதால், மாவட்டத்தில் உள்ள 15 கூட்டுறவு தொழிற்சாலைகளில் உறுப்பினர்களாக உள்ள விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.


---

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## *அடுத்த ஒன்பது ஆண்டுகளில் உணவுப் பொருள்கள் விற்பனை 90,000 கோடி டாலராக உயரும்*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*மும்பை*

*இந்தியாவில், அடுத்த ஒன்பது ஆண்டுகளில் 90,000 கோடி டாலருக்கு (சுமார் ரூ.45 லட்சம் கோடி) உணவுப் பொருள்கள் விற்பனையாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது இப்பொருள்களின் விற்பனை 30,000 கோடி டாலர் என்ற அளவில் உள்ளது.*



உணவு பதப்படுத்துதல்

உணவு தானியங்கள், பருப்பு, காய்கறி, பழங்கள், இறைச்சி, மீன், முட்டை, பால் மற்றும் பால் பொருள்கள் ஆகியவை உணவுப் பொருள்கள் என்ற பட்டியலின் கீழ் வருகின்றன. இன்று நம் நாட்டில் நுகரப்படும் மொத்த உணவுப் பொருள்களில் 20 சதவீதம் மட்டுமே பதப்படுத்தப்பட்டவையாக உள்ளன. அடுத்த ஒன்பது ஆண்டுகளில் இந்த அளவு 35 சதவீதமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதே சமயம் இன்று பின் தங்கியுள்ள துறைகளில் உணவு பதப்படுத்துதல் துறையும் ஒன்றாக உள்ளது.

அமெரிக்காவின் மொத்த வேளாண் உற்பத்தியில் 53 சதவீதம் பதப்படுத்தப்பட்டு விடுகிறது. இது, நியூசிலாந்தில் 42 சதவீதமாக உள்ளது. இந்தியாவிலோ, வேளாண் விளைபொருள்களில் 6 சதவீதம் மட்டுமே பதப்படுத்தப்படுகிறது.

இந்தியாவின் மொத்த உற்பத்தியில் உணவு பதப்படுத்துதல் துறையின் பங்களிப்பு 9 சதவீதமாக உள்ளது. தொழில்துறை உற்பத்தியில் இதன் பங்கு 14 சதவீதமாக உள்ளது. இத்துறையில் 16 லட்சம் பேர் நேரடி வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

சேமிப்புக் கிடங்குகள்

போதிய அளவு சேமிப்புக் கிடங்குகள் மற்றும் குளிர்பதன கிடங்குகள் இல்லாததால் ஆண்டுதோறும் ஏராளமான உணவு தானியங்கள் மற்றும் காய்கறி–பழங்கள் வீணாகின்றன. இதனால் பெரும் பொருள் இழப்பு ஏற்படுகிறது. எனவே சேமிப்பு மற்றும் குளிர்பதனக் கிடங்குகளுக்கு அடிப்படைக் கட்டமைப்புத் துறைக்கான அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் உணவு பதப்படுத்துதல் துறையில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் ரூ.14,000 கோடி முதலீடு மேற்கொள்ளப்படும் என ஃபிக்கி அமைப்பு தெரிவித்துள்ளது. இதில் பெரும் பகுதியை தற்போது செயல்பட்டு வரும் நிறுவனங்கள்தான் மேற்கொள்ளும் என இவ்வமைப்பு கூறுகிறது.

பருப்பு வகைகள்

சென்ற ஆண்டில் பருப்பு வகைகள் பயன்பாடு குறைவாக இருந்தது என ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. அதே சமயம் கோழி இறைச்சி அதிக அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளதாக தெரிகிறது. நடப்பு ஆண்டில் காய்கறி மற்றும் பழ வகைகள் அதிகம் நுகரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்றைய நிலையில் இந்தியர்கள் நுகரும் உணவுப் பொருட்களில் காய்கறிகள் மற்றும் பழங்களின் பங்கு 25 சதவீதமாக உள்ளது. இது, 2020–ஆம் ஆண்டில் 40 சதவீதமாக உயரும் என முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

## நவம்பர் 5–ந் தேதி வரையிலான வாரத்தில்

# உணவு பணவீக்கம் 10.63% உயர்வு

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நவம்பர் 5–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 10.63 சதவீதம் உயர்ந்துள்ளது. இது, அக்டோபர் 29–ந் தேதி வரையிலான வாரத்தில் 11.81 சதவீதமாக இருந்தது. ஆக, இப்பணவீக்கம் 1.18 சதவீதம் குறைந்துள்ளது.



### வெங்காயம்–கோதுமை

கணக்கீடு செய்ய எடுத்துக் கொண்ட வாரத்தில் வெங்காயம் மற்றும் கோதுமை நீங்கலாக பல்வேறு வேளாண் விளை பொருள்களின் விலை, ஓர் ஆண்டு அடிப்படையில் உயர்ந்துள்ள போதும் பணவீக்கம் சற்றே குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

வெங்காயம் விலை 22.89 சதவீதம் குறைந்துள்ளது. கோதுமை விலை 3.63 சதவீதம் சரிந்துள்ளது. அதே சமயம் காய்கறி விலை 27.26 சதவீதமும், பருப்பு விலை 14.44 சதவீதமும் அதிகரித்துள்ளது. பால் விலை 10.74 சதவீதமும், முட்டை, இறைச்சி போன்ற அசைவ உணவுப் பொருட்களின் விலை 11.73 சதவீதமும் உயர்ந்துள்ளது. பழங்களின் விலை 5.99 சதவீதம் உயர்ந்துள்ளது. தானியங்கள் விலை 3.53 சதவீதம் அதிகரித்துள்ளது.

நவம்பர் 5–ந் தேதி வரையிலான வாரத்தில், அத்தியாவசியப் பொருட்கள் பணவீக்கம் 10.39 சதவீதமாக உள்ளது. இது, முந்தைய வாரத்தில் 11.43 சதவீதமாக இருந்தது. மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையிலான உணவுப் பணவீக்கத்தை கணக்கிடுவதில் அத்தியாவசியப் பொருட்களின் பங்கு 20 சதவீதமாக உள்ளது.

நார், எண்ணெய் வித்துக்கள், கனிமங்கள் உள்ளிட்ட உணவு அல்லாப் பொருட்கள் பணவீக்கம் 6.41 சதவீதத்திலிருந்து 5.33 சதவீதமாக குறைந்துள்ளது. எரிபொருள் மற்றும் மின்சாரப் பணவீக்கம் 15.49 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, முந்தைய வாரத்தில் 14.50 சதவீதமாக இருந்தது.

உணவுப் பொருட்களின் விலை அதிகரித்து வருவது மத்திய அரசு வட்டாரங்களுக்கு கவலையளிப்பதாக உள்ளது. எனினும் உணவுப் பொருட்கள் சப்ளையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் டிசம்பர் மாதத்திலிருந்து பணவீக்கம் கட்டுக்குள் வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பொது பணவீக்கம்

அனைத்துப் பொருட்களுக்கான பொது பணவீக்கம் செப்டம்பர் மாதத்தில் 9.73 சதவீதமாக இருந்தது. 2010 டிசம்பர் மாதத்திலிருந்து இப்பணவீக்கம் 9 சதவீதத்திற்கும் அதிகமான அளவிலேயே இருந்து வருகிறது. பணவீக்கத்தை கட்டுக்குள் கொண்டு வரும் வகையில் சென்ற ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து இதுவரை பாரத ரிசர்வ் வங்கி முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதத்தை 13 முறை உயர்த்தியுள்ளது. டிசம்பர் மாதம் வரை பணவீக்கம் அதிகமாகவே இருக்கும் என இவ்வங்கி தெரிவித்துள்ளது.